ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1698/7 - 2011 මාර්තු 22 වැනි අඟහරුවාදා - 2011.03.22
**1698/7 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : கேஏ/எல்டீ/1/1/36.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

தென் மாகாணம் காலி மாவட்டத்தில், கரந்தெனிய பிரதேச செயலாளர் பிரிவில் குருந்துகஹஹதேக்ம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கா 3849 மற்றும் 2011.01.15 ஆந் திகதிய துண்டு இல. 01 என குறிப்பிடப்பட்டுள்ள 0.0215 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரங்கள் பின்வருமாறு:-

1. **துண்டு இல. 1**
காணியின் பெயர் : பதிராஜவத்த ; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : வரையறுக்கப்பட்ட த பினான்ஸ் கம்பனி; விஸ்தீரணம் : 0.0215 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2011 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கரந்தெனிய பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2011ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். என். எஸ். ரீ. கே. த சில்வா,
பிரதேச செயலாளர்,
கரந்தெனிய.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கரந்தெனிய,
2011.03.07.

04- 238

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : பிய3/1/1/4237 (2).

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தின், பியகமை பிரதேச செயலாளர் பிரிவில் இஹல பியன்வில கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அதிபதியினால் தயாரிக்கப்பட்ட 2010.01.11 ஆந் திகதிய கம 3702 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 2, 5, 8, 11 எனக் கீழ் விபரிக்கப்பட்ட நான்கு (04) காணித் துண்டுகள்:-

1. **துண்டு இல. 2**
காணியின் பெயர் : கணேமுல்ல வீதியில் வரி மதிப்பீட்டு இலக்கம் தெரியாத காணி ; விபரம்: மயான பூமி ; உரிமை கோருபவர் : அரசு ;